68. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

107. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் கால வரைக்கான தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்புக் குழுவின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

108. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

109. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

110. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

111. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

112. கோரிக்கை எண். 22—கால்நடைப் பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

113. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

114. தமிழ்நாடு இறைச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

115. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டு பணிகள் விபரம் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

116. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால்—1987' என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

117. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் வருவாய்த் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை.

118. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவினங்கள் அறிக்கையில் உள்துறை தொடர்பான பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்தைந்தாவது அறிக்கை.

119. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

120. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983–84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.

இணைப்பு I.

(61 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க,)

மதுவிலக்கு— ஆயத்தீர்வைத் துறை.

கோரிக்கை எண் 2.

மாநில ஆயத்தீர்வை 1987-88.

கொள்கை விளக்கக் குறிப்பு.

மதுவிலக்கை முழுமையாக அறிமுகப்படுத்தியது இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலம் ஆகும். தேசப்பிதாவின் அழைப்பிற்கிணங்க, 1937 அக்டோபரில், முன்னாள் சென்னை மாகாணத்தின் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் மேலும் மூன்று மாவட்டங்களில் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது, அப்போது ஆட்சி செய்து வந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைக்கப்பட்ட அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீங்கியபோது 1943 நவம்பரில், அந்த நான்கு மாவட்டங்களிலும் மதுவிலக்கு செயல்படுத்தப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், மக்கள் அரசு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் 1946 அக்டோபரில் எட்டு மாவட்டங்களில் மீண்டும் மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டது. 1–10–1947 அன்று மதுவிலக்கு மேலும் பல மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மகாத்மா காந்தியின் அடுத்த பிறந்த தினத்தன்று அப்போதிருந்த பிரிவினை ஆகாத சென்னை மாகாணம் முழுவதிலும் மதுவிலக்கு முழுமையாக செயற்படுத்தப்பட்டது.

2. மத்திய அரசு தேசிய கொள்கையாக நாடு முழுவதும் மதுவிலக்கைச் செயற்படுத்த முன்வரும்வரை இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டங்கள் செயற்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என்று அரசு 1971 ஆகஸ்டில் முடிவு செய்தது. இதற்கிணங்க மதுவிலக்குச் சட்டத்தின் விதித் துறைகளைச் செயற்படுத்துவதை 30–8–1971லிருந்து நிறுத்தி வைத்து 28–8–1971 அன்று அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. பின்னர், இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டம்